**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, சர்க்கார் பள்ளிகளில் பணி புரிகின்ற ஆசிரியர்களையும், தனியார் பள்ளிகளில் பணி புரிகின்ற ஆசிரியர்களையும் எவ்வெவ்வகையில் ஒத்த அளவில் கொண்டுவர முடியுமோ, அந்த அளவில் கொண்டு வர முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. சர்க்கார் பள்ளிகளில் இருக்கிறவர்கள் பெற முடியாத சலுகைகள் சிலவற்றைத் தனியார் பள்ளிகளில் இருக்கிறவர்கள் பெறக்கூடிய நிலையும் இருக்கிறது. சர்க்கார் பள்ளிகளில் இருக்கிறவர்கள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு மாற்றப்படக்கூடிய அவதிக்கு உள்ளாகிறார்கள். அந்த நிலை தனியார் பள்ளிகளில் இருப்பவர்களுக்கு இல்லை. ஓரிடத்தில் வேலைக்கு அமர்ந்தால் தொடர்ந்து முப்பது, முப்பத்தைந்து ஆண்டுகள் அதே இடத்தில் இருக்கக்கூடிய வழிகள் இருக்கின்றன. ட்ரிபிள் பெனிஃபிட் என்ற முறையிலே தனியார் பள்ளிகளில் இருப்பவர்கள் அடைந்து வருகிறார்கள். தனியார் பள்ளிகளில் இருக்கின்றவர்களுக்கும், சர்க்கார் பள்ளிகளில் இருக்கின்றவர்களுக்கும் இடையே அதிக வேறுபாடு இல்லாத அளவுக்குச் செய்யும் முயற்சியில் அரசு ஈடுபட்டு இருக்கிறது.

* 233 வினா.—**திரு. கே. போஜன் :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் பணிபுரியும் மாநில ஊழியர் களுக்கு வழங்கப்பட்ட குளிர்காலப்படி **(Winder Allowance)** அங்குள்ள சர்க்கார் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப் படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் என்றால்; அதற்கான காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ). அரசினர் உயர்நிலைப்பள்ளி ஊழியர்களுக்குக் குளிர்காலப்படி வழங்கப்படுகிறது. ஆனால் அரசினர் (வாரிய) உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஊழியர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அவர்களுக்குக் குளிர்காலப்படி கொடுக்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் இருந்து வருகிறது.

**திரு. கே. போஜன் :** தலைவர் அவர்களே, குளிர்காலப்படி, கோத்தகிரியில் உள்ள அரசினர் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் களுக்கும் கூனூரில் உள்ள நகர மன்ற உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் களுக்கும்தான் கொடுக்கப்படுகின்றது. கடந்த மாதம் நமது முதலமைச்சர் அவர்கள் கூனூருக்கு வந்திருந்தபோது, நீலகிரி ஆசிரியர்கள் சங்கம், ஏனைய பள்ளி ஆசிரியர்களுக்கும் குளிர் காலப்படி கொடுக்கவேண்டும் என்று அவரிடம் மனுக் கொடுத்தார்கள். அது உடனடியாகப் பரிசீலனை செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நான் முதலிலே கூறியபடி, அரசினர் உயர்நிலைப்பள்ளி ஊழியர் களுக்குக் குளிர்காலப்படி இப்பொழுது வழங்கப்படுகிறது.

1969 செப்டம்பர் 12]

வாரியத்தின்கீழ் இருந்த உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஊழியர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கை பரிசீலனையில் இருந்து வருகிறது. விரைவிலே அதுபற்றி முடிவு எடுக்கப்படும்.

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** நீலகிரி மலைவாச ஸ்தலத்தில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு 'ஹில் அலவன்ஸ்' என்று கொடுக்கப்பட்டு வருவது, 1922-ம் வருஷத்தில் நிச்சயிக்கப் பட்டதாகவும், அன்று முதல் இன்று வரை மாறாமல் இருப்ப தாகவும், இதை உடனடியாக இன்றைய கால நிலைக்குத் தகுந்தபடி மாற்றியமைத்துத் தர வேண்டும் என்றும் அந்த ஊழியர்களிடமிருந்து அரசுக்கு மனு வந்திருக்கிறதா ? வந்திருந்தால் அதைப்பற்றி அரசு அவசர கவனம் செலுத்தி உத்தரவிடுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஏற்கனவே இருந்த விகிதங்கள், 16—11—1968-லிருந்து மாற்றியமைக்கப்பட்டிருக் கின்றன.

THIRU K. VINAYAKAM : Sir, is the Hon. Minister aware of the fact that winter is a natural phenomenon which does not make any difference between the Government servants working in the Nilgiris and the school teachers working in the Nilgiris. So, why should there be such an inordinate delay in examining and granting their request for the winter allowance?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாவட்ட வாரியங்களின்கீழ் இருந்த பள்ளிகளை அரசினர் எடுத்துக் கொண்டு, ஒன்றுபடுத்தும் முயற்சி நடைபெற்று வருகிறது. அந்த முயற்சி வெற்றி பெறுவதற்குள்ளாக அரசுப் பள்ளிகளில் இருக்கும் ஆசிரியர்களுக்கு உள்ள சில சலுகைகளையும் மற்றவை களையும் வாரியத்தின்கீழ் இருந்த பள்ளிகளின் ஆசிரியர்களுக்கும் அளிப்பதுபற்றிய பிரச்சினை ஒத்திப் போடப்பட்டு வந்தது. அந்த முயற்சி ஒரு பக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்க, இதற் கிடையிலேயே ஏதாவது செய்யலாமா என்பதும் பரிசீலனையில் இருந்து வருகிறது. விரைவில் அதுபற்றி முடிவு எடுக்கப்படும்.

DR. H. V. HANDE : Sir, invariably we find that whenever an allowance is asked for by the teachers it takes some time for them to get it, that is, after the N.G.Os. get it. This has been the practice for a number of years, whether it is in the Madras City or in the Ooty town. This has created a lot of unhappiness among the teachers. So, will the Government give a categorical assurance, without waiting for the agitation to come from the teachers, that as soon as facilities are given to the N.G.Os., those facilities would be automatically given to the teachers also?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, என்.ஜி.ஓ.-க்களுக்குக் கொடுக்கப்பட்டதற்குப் பிறகு மற்றவர் களுக்குக் கொடுக்கும் முயற்சி தனியாக எடுக்கப்படுகிறது. 'அவார்டு' கொடுக்கும்போது, என்.ஜி.ஓ.-க்களுக்கு என்று

[1969 செப்டம்பர் 12

முதலில் வழங்கப்படுகிறது. அவர்களுக்கு வழங்கப்பட்டதற்குப் பிறகு, மற்றவர்களுக்கும் முறையாக அந்தந்தச் சலுகைகள் வழங்கப்பட இருக்கின்றன. ஒரு கிளர்ச்சி நடத்திய பிறகுதான் வழங்க வேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுக்கு இருப்பதில்லை. கிளர்ச்சி எதுவும் வர இடமில்லாமலே செய்ய வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில், முன்கூட்டியே செய்யவேண்டும் என்று அரசு எண்ணிக் கொண்டிருக்கிறது. ஆகவே, அது பரிசீலனையில் இருந்து வருகிறது. விரைவில் பரிசீலனை செய்து முடிக்க வேண்டிய எண்ணமும் அரசுக்கு இருக்கிறது.

## கிளை நூலகங்களுக்கு நூல்கள் வாங்கும் முறை

* 234 வினா.—திரு. ந. தருமலிங்கம்: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசினர் உதவி பெற்று இயங்கி வரும் கிளை நூலகங்களுக்கு நூல்கள் வாங்குவதில் கடைப்பிடிக்கப்படும் விதி முறைகள் யாவை ?

(இ) இதனை திருத்தியமைக்கும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) அரசாங்க மானியம் பெறும் நூலகங்களில் வாங்கப்படும் நூல்கள், வெளியீடுகள், பத்திரிகைகள் இவற்றின் தேவைப் பட்டியலுக்கு உள்ளூர் நூலக அதிகாரமன்றத்தின் முன் ஒப்புதலைப் பெற வேண்டும். வாங்கப்படும் நூல்கள், வெளியீடுகள், பத்திரிகைகள், இவை கீழே கூறப்பட்ட நிபந்தனைகளை நிறைவு செய்யவேண்டும்.

(1) அவை பொதுவாக பலரும் விரும்பி படிக்கத்தக்கவையாகவும், பண்பாடு மதிப்புடையனவாகவும் இருக்கவேண்டும்.

(2) நூல்கள் நாவல்களாகவோ, கதைகளாகவோ இருக்குமானால் தரமான எழுத்தாளர்களுடையதாக இருக்கவேண்டுமே அன்றி, தரங்கெட்டவையோ என்ற ஐயுறவுக்கு இடமளிப்பவையாக இருக்கக்கூடாது.

(3) சில வகுப்பினரையோ, சமயங்களையோ, இழிவு படுத்தும் நூல்கள், வெளியீடுகள், பத்திரிகைகள் ஆகிய இவற்றை வாங்கக்கூடாது.

(4) தரங்கெட்டவையோ என்ற ஐயுறவுக்கு இடமளிப்பவையாக உள்ள அல்லது விரும்பத்தகாத படங்களை உடைய நூல்கள், வெளியீடுகள், பத்திரிகைகளை வாங்கக்கூடாது.

(இ) இல்லை.

திரு. ந. தருமலிங்கம்: தலைவர் அவர்களே, காலஞ்சென்ற நம்முடைய அண்ணா அவர்கள் மிகச் சிறந்த பேரறிஞர் என்பது நாடறிந்த உண்மை ஆகும். அவர் எழுதிய சிறந்த நூல்களும் ஏடுகளும் அரசாங்கத்தினுடைய மானியம் பெறும் நூலகங்களில் பெரும்பாலும் இல்லை. இதை மாற்றியமைக்க அரசு திட்டம் வைத்திருக்கிறதா ?